[1981 ஜனவரி 24

திரு. எல். இளையபெருமாள்: சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் என்று சொன்னார்கள். கடந்த 10 மாதகாலமாக சங்கராபுரத்தில் உள்ள மருத்துவ மனையில் மருத்துவர் இல்லை என்று பல மனுக்கள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்பது உண்மையா? 10 மாதகாலமாக போடாமல் இருப்பதற்கான காரணம் என்ன? வேலையில்லா மல் பல டாக்டர்கள் இருக்கின்றபோது, இந்த நிலைமை ஏன் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர் களே, கிராமப்புறங்களுக்கு மருத்துவர்கள் போக மறுக்கிறார்கள் என்கிற எண்ணம் பரவலாக இருந்தது. மாண்புமிகு முதலமைச் சர் அவர்கள் நேரடியாக இதில் தலையிட்டு, சர்வீஸ் கமிஷன் மூலமாக நிரந்தரமாக மருத்துவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். முன்பு எல்லாம் ஒரு ஆண்டுக்கு 500 மருத்துவர்கள் தான் தேர்ந்தெடுக்கப்பெற்று வந்தார்கள். இந்த முறை முதன் முதலாக ஒரு புரட்சிகரமான முறையில் 1,400 மருத்துவர்களை ஒரேயாண்டில் நிரந்தரமான முறையில் நிய மிப்பதற்கான முறையில் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள். இதன் காரணமாக வேலை இல்லாமல் இருக்கும் மருத்துவப் பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்கவும், மருத்துவர்கள் இல்லா மல் இருக்கும் மருத்துவ மனைகள் மருத்துவர்களைப் பெறவும் முடியும். மருத்துவர்கள் தேர்வை அந்தக் குழு நடத்திக் கொண்டு இருக்கிறது. இன்னும் ஒரிரு மாதங்களில் அந்தப் பணி முடிந்துவிடும். அதற்குப் பிறகு இத்தகைய குறை இருக்காது என்று திட்டவட்டமாக நான் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 38, 39 ஆகி யவை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டு கோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கேந்திர கிராம நிலையங்கள்

*வினா எண். 40—திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் திருச்சியிலும், லால்குடியிலும் கால்நடை பராமரிப்புத்துறையில் உள்ள கேந்திர கிராம திட்டத்தை குளித்தலைக்கும், கிருஷ்ணராயபுரத்துக்கும் மாற்ற அரசு உத்திரவிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

1981 ஜனவரி 24]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) இந்த இரண்டு கேந்திர கிராம நிலையங்களை மாற்ற தேவையான நிதி, வேளாண்மைத் துறையின் 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 13-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 84ல் வழங்கப்பட்டுள்ளது. இந்த கிளை நிலையங்கள் விரைவில் துவக்கப்படும்

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவர் அவர்களே திருச்சி லால்குடி ஆகிய இரண்டு இடங்களிலிருக்கும் கிளை நிலையங்களை மாற்ற வேண்டிய அவசியம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-10]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே பதிலில் கூறியபடி விரைவில் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவரவர்களே, அதை மாற்றுவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்பதைத்தான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, அதை மாற்றுவதற்கான சரியான காரணம் பற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. அந்த விவரம் கிடைத்தவுடன் இங்கே தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

அ. பேரவையின் அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *23—1—1981* அன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தில் பேரவையின் நடவடிக்கைகள் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டன :—

24—1—1981 *(சனிக்கிழமை)*	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி.